# இஎஸ்ஐ மண்டல அலுவலகத்தில் குடியரசு தின விழா



கோவை, ஜன. 27: கோவை ராமநாதபுரத்தில் தொழிலாளர் அரசு காப்பீட்டு கழக சார் அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகத்தில், 76வது குடியரசு தினத்தையொட்டி, கோவை தொழிலாளர் அரசு காப்பீட்டு கழக இணை இயக்குனர் (பொ) ரவிக்குமார் நேற்று தேசியக்கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். இதில், துணை இயக்குனர் கார்த்திகேயன், இசக்கி சிவா ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும், கோவை சார் மண்டல அலுவலகத்தில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பலர் கலந்துகொண்டு தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தினர். மேலும், இ.எஸ்.ஐ பங்குதாரர்கள், காப்பீட்டாளர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

# மண்டல இ.எஸ்.ஐ. அலுவலகத்தில் குடியரசு தின விழா

கோவை, ஜன.27–

கோவை–திருச்சி ரோட்டில் உள்ள மண்டல இ.எஸ்.ஐ. அலுவலகத்தில் குடியரசு தின விழா நடைபெற்றது. இணை இயக்குனர் (பொறுப்பு) கே.ஆர்.ரவிக்குமார் தேசியக்கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். துணை இயக்குனர் கார்த்திகேயன், இசக்கி சிவா ஆகியோரும் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினார்கள். அலுவலக ஊழியர்கள், ஒய்வூதியதாரர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர். விழாவில் கே.ஆர்.ரவிக்குமார் பேசும்போது, குடியரசு தினம் நமது முன்னோர்களின் போராட்டங்கள், தியாகங்கள் மற்றும் கனவுகளை நினைவூட்டும் நாளாகும். இளம் குடிமக்களை உள்ளடககிய நாட்டின் சிறந்த எதிர் காலத்தை நோக்கி பாடுபடுவது நமது கடமையாகும் என்று கூறினார்.